மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

19.09.2022 திங்கட்கிழமை supeedsam.com supeedsam@gmail.com


# நாடு பூராகவும் மாநாடுகள்

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்காக நாடளாவிய ரீதியில் தொடர் மாநாடுகளை நடாத்துவது என மேலவை இலங்கை கூட்டணியின் முதலாவது செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் சுமார் 3 மணி நேரத்துக்கும் மேலாக நடைபெற்ற இந்த சந்திப்பில் கட்சி ரீதியாக மேற்கொள்ள வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்து நீண்ட நேரம் ஆலோசிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக எதிர்வரும் தேர்தலில் எவ்வாறு செயற்படுவது மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அந்தக் கூட்டத்திற்கு ஒவ்வொரு கட்சியிலிருந்தும் 5 பேர் ஆஜராக வேண்டும் என்றும் அவர்களில் ஒருவர் பெண் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நாளை முதல் பாராளுமன்றதுதை பொது மக்கள் பார்வையிடலாம்



பாராளுமன்றத்திற்கு பொதுமக்கள் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் நாளை (20) முதல் தளர்த்தப்படுகிறது. அதன்படி நாளை முதல் பாராளுமன்றத்தின் பார்வையாளர் கூடம் திறக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. கொவிட் சூழ்நிலை மற்றும் பாதுகாப்பு காரணங்களுக்காக பொதுமக்கள் பாராளுமன்றத்திற்கு வருவதற்கான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. கட்டுப்பாடுகள் நீக்கப்படுவதுடன், நாளை முதல் பாராளுமன்ற கூட்டத்தொடர் இல்லாத நாட்களில் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை பாராளுமன்றத்தை பார்வையிட பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# இளம் சமுகத்திருக்கு ஜப்பான் தொழில்நுட்ப பயிற்சி

குறைந்த வருமானம் பெறும் கிராமிய இளம் சமுகத்திருக்கு ஜப்பான் அரசாங்கம் தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்க முன்வந்துள்ளது. தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஜப்பான் தூதுவர் மிசு கொஸியிடம் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக ஜப்பான் தூ துவர் மிசு கொஸி, இதனை தெரிவித்தார். அதற்கிணங்க தொழில்நுட்ப பயிற்சி மத்திய நிலையம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அமைச்சருக்கும் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற பொழுது இதன் அமைச்சர் இந்த வேண்டுகோளை விடுத்தார். ஜப்பான் தூதுவர் அதற்கு மிக சாதகமான பதிலை வழங்கினார். இதன்மூலம் ஜப்பானில் வேலைவாய்ப்புகளை தேடிச்செல்லும் இலங்கை இளைஞர் யுவதிகளுக்கு சிறந்த வாய்ப்புக்கள் கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நகல்வடிவ தீர்மானத்திற்கு அலிசப்ரி கடும் எதிர்ப்பு



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் இலங்கை தொடர்பான தீர்மானத்தின் நகல்வடிவம் அவசியமற்றது பிளவுபடுத்தும் தன்மையை கொண்டது என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இலங்கை இதனை எதிர்க்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார். குறிப்பிட்ட தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டாலும் வாக்கெடுப்பிற்கு விடப்படாவிட்டாலும் இலங்கை அதனை எதிர்க்கும் என வெளிவிவகார அமைச்சர் மோர்னிங்கிற்கு தெரிவித்துள்ளார். நகல்வடிவ தீர்மானம் குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்த கேள்விக்கு பதிலளித்துள்ள வெளிவிவகார அமைச்சர் இந்த தருணத்தில் இது தேவையற்ற விடயம் என நாங்கள் அவர்களிற்கு தெளிவாக தெரிவித்துள்ளோம் என குறிப்பிட்டுள்ளார். நாங்கள் பிளவுபடுத்தும் எந்த பொறிமுறையையும் இந்த தருணத்தில் விரும்பவில்லை,எங்களிற்கு சர்வதேச

02

# பாடசாலை நேரத்தை மாலை 4 மணிவரை நீடிக்க யோசனை

பாடசாலை நேரத்தை மாலை 4 மணிவரை நீடிக்க வேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் ரொசான் ரணசிங்க தெரிவித்துள்ளார். தம்புள்ளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துக்கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன், அதிகரிக்கப்படும் மேலதிக நேரம் மாணவர்களின் விளையாட்டுக்காக ஒதுக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். குறைந்தது 2 மணித்தியாலங்களாவது, பிள்ளைகள் விளையாட்டில் ஈடுபடவேண்டும் என விளையாட்டுத் துறை அமைச்சர் ரொசான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

# நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே முக்கியம் - மைத்திரி



கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக நாட்டின் பிரச்சினைகளுக்கு விடை காண்பதே முக்கியம் என சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். நாட்டைக் கட்டியெழுப்ப இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமெனவும், அதற்காக இளைஞர்களின் கருத்துக்களை கேட்க வேண்டும் என்றும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

# மீண்டும் போராட்டத்துக்கு தாயாராகும் ஆசிரியர் சங்கம்- ஜோசப் ஸ்டாலின்




தற்போதைய பொருளாதார நெருக்கடியில் ஆசிரியர்களுக்கு தற்பொழுது வழங்கப்படும் சம்பளம் போதுமானதாக இல்லாததால் எதிர்காலத்தில் மாபெரும் போராட்டம் முன்னேடுக்கப்படும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிவிட்ட அரசியல்வாதிகள் தற்போது மக்களின் வரிப்பணதில்

02

# கோழி இறைச்சி விலையில் மாற்றம்

தோலுடன் உறை நிலையிலுள்ள 1 கிலோகிராம் கோழி இறைச்சி இன்று முதல் ரூபா 1300 முதல் 1350 ரூபா வரையில் விற்பனை செய்யப்படும் என அகில இலங்கை கோழிப்பண்ணை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. தொடர்ந்து கோழி உற்பத்திகளை சந்தைக்கு விடுவிப்பது தொடர்பில் சங்க உறுப்பினர்கள் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக அகில இலங்கை கோழி உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார். முக்கியமாக கால்நடை தீவனம் கிடைத்தால் கோழி உற்பத்தி செலவை குறைக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.




# சிறுபான்மை இனமக்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட அடக்குமுறையே பொருளாதார நெருக்கடிக்கு காரணம்

**செ.பேரின்பராசா**

இலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள பொருளாதார ரீதியான நெருக்கடிக்கு பிரதான காரணம் இந் நாட்டில் வாழும் சிறுபான்மை இனமக்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட இன ரீதியிலான அடக்குமுறையாகும்.என்றுதமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா. கலையரசன் குறிப்பிட்டார். நீண்ட காலமாக சுத்தமான குடிநீர் இன்றி சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்து வந்த நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வீரச்சோலை கிராம மக்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மூலமாக. குழாய் நீர் விநியோகம் செய்யும் திட்டத்தின் ஆரம்ப வைபவம் 2022-09-16 ஆந் திகதி இடம்பெற்றது. இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் அ.ஆனந்த. பொதுஜனப் பெரமுன அமைப்பாளர் எஸ்.சாந்தலிங்கம் பிரதேச சபை உறுப்பினர் சுதர்சன் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர். அங்கு பாராளுமன்ற உறுப்பினர், த.கலையரசன் மேலும் பேசுகையில்

இந் நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக தமிழ் மக்கள் தமது உயிர்களைக் காப்பாற்ற வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இன்று புலம்பெயர்ந்து வாழும் எமது தமிழ் மக்களை மீளவும் தாய் நாட்டிற்கு வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். ஆனால் இந் நாட்டில் எமது இனம் சுதந்திர இனமாக சுயநிர்ணய உரிமைகளைப் பெற்று வாழும் சூழல் உருவாகும் போது அவரது அழைப்பு சாத்தியமாகும். நாவிதன்வெளி பிரதேசத்தில் மேற் கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளில்



பெரும்பான்மையான பணிகள் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டவையாகும் என்பதை இத் தருணத்தில் நன்றிப் பெருக்குடன் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

கடந்த காலத்தில் நான் கிழக்கு மாகாண சபை உறுப்பினராக இருந்த வேளையில் எமது மக்களின் தேவைகள் குறித்து அன்றிருந்த முதலமைச்சர் நசீர் அகமட்டிடம் பல தடவை சுட்டிக்காட்டியும் அவர் எதற்கும் செவிசாய்க்கவில்லை என்பதையும் கூறியாக வேண்டியுள்ளது. இதில் வீரச்சோலை மக்களின் குடிநீர்ப் பிரச்சினையும் ஒன்றாகும். எமது தமிழ் மக்கள் அரசியல் ரீதியாகவும் அபிவிருத்தியிலும் இன்னோரன்ன விடயங்களிலும் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளனர். இதற்கு இக் கிராமம் சிறந்த சான்றாகும். அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ்ப்பகுதிகளான வீரச்சோலை. திருக்கோவில் பொத்துவில் போன்ற இடத்தில் வாழும் மக்கள் எதிர் கொண்ட குடிநீர்ப் பிரச்சினை தொடர்பாக நான் பாராளுமன்றத்தில் பலதடவை பேசியுற்ளேன். அன்று துறைசார் அமைச்சராகவிருந்த வாசுதேவ நாணயக்காரவை சகபாராளுமன்ற உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுடன் சென்று பேசி நடவடிக்கை மேற்கொண்டேன்.

இன்று எமது நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் அ.ஆனந்த சாந்தலிங்கம் போன்றவர்கள் கட்சி பேதங்களை மறந்து எமதுமக்களுக்கு விமோசனம் கிடைக்க ஒன்றுபட்டு உழைப்பது மகிழ்ச்சியான விடயமாகும். இந்த வேளையில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் மற்றும் பொறியியலாளர் வினோதன் ஆகியோருக்கு மக்களின் சார்பில் நன்றி தெரிவிக்கின்றேன் என்றார்.

# மீன்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் கூடுதல் அந்நியச் செலாவணியையும் ஈட்ட முடியும்

**( வாஸ் கூஞ்ஞ)**

மீன் மற்றும் உலர் மீன்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் கூடுதல் அந்நியச் செலாவணியையும் ஈட்ட முடியும் அதைவிடுத்து வெளிநாட்டு செலாவனியை உள்வாங்குவற்காக தவறான வழியை மன்னாரில் திணிக்க முற்படும் சுற்றுலாத் துறை அமைச்சர் திருமதி டயானா கமகேவின் கருத்துக்கு கண்டனம் தெரிவிக்கின்றேன் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



மன்னாரை களியாட்டங்களுக்காக பயன்படுத்த முடியும் எதற்காக கருவாடு உலர்த்த வேண்டும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் திருமதி டயானா கமகேவின் கருத்துக்கு கண்டனம் தெரிவித்து வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அமைச்சர் திருமதி டயானா கமகேவுக்க் அனுப்பியுள்ள மடலில் மன்னார் மாவட்டம் பாரம்பரிய கலை மற்றும் கலாச்சார பின்னனியினை கொண்ட மாவட்டமாகும். அபிவிருத்தி என்ற போர்வையில் வெளிநாட்டு செலாவனியை உள்வாங்குவற்காக தவறான வழியைத் தேர்ந்தெடுப்பது சரியல்ல என்று நான் நினைக்கின்றேன்.

இம் மாவட்ட மக்கள் மீன்பிடி மற்றும் விவசாயம் ஆகிய இந்த இரண்டில் இருந்தும் தங்கள் வாழ்க்கைக்காக சம்பாதிக்கின்றனர். இந்த மக்களின் முக்கிய வருமான ஆதாரங்கள் இவை. எனவே இந்தத் தொழில்களை குறைத்து மதிப்பிட முடியாது. மீன் மற்றும் உலர் மீன்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் கூடுதல் அந்நியச் செலாவணியையும் ஈட்ட முடியும். உலர் மீன் தயாரிப்பது குறைத்து மதிப்பிட வேண்டிய தொழில் அல்ல. எனவே நீங்கள் கூறியது ஏற்றுக்கொள்ள முடியாதது மற்றும் பொருந்தாததுமாகும் என இவ்வாறு தனது கடிதத்தில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

# மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் ஏன் இன்னும் நியமிக்கப்பட வில்லை



கடந்த வாரம் இலங்கையில் அரசியல் ரீதியாக பல இடங்களில் பல பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட கடந்த கால அரசாங்கத்தின் பல பதவிகள் மீளாய்வு செய்யப்பட்டு, நிறுத்தப்பட்டு புதியவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. இதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் பதவி இடைநிறுத்தப்பட்டதாக தெரிய வருகிறது. மீண்டும் இப் பதவிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்னும் ஒருவர் கூட நியமிக்கப்படவில்லை. ஏன் இன்னும் நியமிக்கப்பட வில்லை. விரைவாக அபிவிருத்திக் குழுத் தலைவர் நியமிக்கப்பட வேண்டும்.

இத் தலைவரைப் பொறுத்தவரையில் இலங்கையில் ஒதுக்கப்படுகின்ற ஒதுக்கீடுகளில் மாவட்டத்திற்கான பங்கை கொண்டு வந்து சேர்ப்பதும் இம் மாவட்டத்தில் வேலைகளை நெறிப்படுத்துவதும் இன்றைய கடமையாகும்.

கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட தலைவர்கள் பங்குளை கொண்டு வந்தார்களா? இருந்தவற்றை நடைமுறைப் படுத்தினார்களா? இல்லாதவற்றை கொண்டு வருவதற்கு முயற்சித்தார்களா என்பது தொடர்பாக சமூகத்திற்கு குறிப்பிட்ட வீதமே தெரியும். ஏனையவர்களுக்கு தெரிந்து கொள்வதற்கான சூழ்நிலையும் இல்லை.

எனவே தெரிவு செய்யப்படும் அபிவிருத்திக்குழுத் தலைவர் சிறப்பாக நிருவாகம் செய்யக் கூடியவாறு உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் உள்ள நிலையில் தேவையானவற்றை கொண்டு வரும் பட்சத்தில் சிறப்பான முறையில் சேவையாற்ற முடியும்.

எனவே கடந்த காலங்களில் முடித்த வேலைகளுக்கான நிதியையும், முடிக்காத வேலைகளுக்கான நிதியையும், புதிய வேலைகளுக்கான நிதியையும் கொண்டு வருவதற்கு விரைவாக அபிவிருத்திக் குழுத் தலைவரை நியமிக்குமாறு மு.கிழக்கு மாகாணசபை உறுப்பினர், ஈபிஆர்.எல்.எப்-ப.ம, இரா.துரைரெத்தினம் இவ் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஒலுவிலில் 19 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட நூலகம் திறப்பு



**(றியாஸ் இஸ்மாயில்)**

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் பங்களிப்புடன் தவிசாளர் ஏ.எல். அமானுல்லாவின் முயற்சியின் பயனாக சுமார் 19 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொது நூலகம் நேற்று முன்தினம் மாலை (17.09.2022) வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

அட்டாளைச் சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எல். அமானுல்லா தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம். பிரதம அதிதியாக கலந்து கொண்டு நூலகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினருமான எம்.எஸ். உதுமாலெப்பை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகச் செயலாளர் உயர்பீட உறுப்பினர் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ. கபூர்,அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி ,அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உதவி தவிசாளர் எஸ். எம்.எம்.ஹனீபா,பிரதேச சபையின் உறுப்பினர்களான ஏ.எஸ்.எம். உவைஸ் ஏ.பீ.பதுறுதீன்,எம்.எஸ். அமீன் ,எம்.ஹம்சா பிரதேச சபையின் செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ்,வைத்தியர் கே.எல்.எம்.நக்பர் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். ஒலுவில் பிரதேசத்தின் நீண்டகாலமாக பழைய கட்டிடத்தில் இயங்கி வந்த வாசிகசாலை மக்களின் கோரிக்கைக்கமைவாக எல்.டீ.எஸ்.பி.திட்டம் மற்றும் பிரதேச சபையின் பங்களிப்புடன் நவீன முறையில் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் போராட்டத்துக்கு தாயாராகும் ஆசிரியர் சங்கம்- ஜோசப் ஸ்டாலின்

சுகபோகம் அனுபவித்துக்கொண்டு மக்களின் வாழும் உரிமையை பறித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் மக்களின் போராட்டங்களை அடக்கி ஆட்சியாளர்கள் ஒருபோதும் வெற்றி பெறமுடியாது என்பதோடு போராட்டம் ஒரு நாள் இந்த அரசாங்கத்தை அழித்துவிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# மனிதனின் ஆய்ந்தோய்ந்து பாராத கடல்மண் அகழ்வினால் அழிந்து போயுள்ள கடற்கரையோர தாவரங்கள்

**அஸ்ஹர் இப்றாஹிம்**

இறைவன் இயற்கையாக பல அருட்கொடைகளை மனிதனுக்கு வழங்கியுள்ளான் இதில் ஒன்றுதான் கடற்கரையோரம்.இந்த சூழலில் கடல் அலையின் தாக்கம் அதிகமாக இருக்கும்.இதனால் கடலரிப்பு ஏற்பட்டு கடற்கரையிலுள்ள மண் இழுத்துச் செல்லப்பட்டு கடல் அரிப்பு ஏற்பட அதிக வாய்புள்ளதால் கடற்கரை ஓரங்களில் மண் அரிப்பை தடுப்பதற்காகவே கடற்கரையோர தாவர சாகியம் தொன்றுதொட்டு வளர்ந்து காணப்பட்டது. மனிதனின் தேவைக்காக அவ்வப்போது கடல் மண் அகழ்வினாலும் , 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி போன்ற இயற்கை அழிவினாலும் , திட்டமிடப்படாத கட்டட நிர்மாணங்களினாலும் கடற்கரையோரங்களில் வளர்ந்து காணப்பட்ட ஆழமான வேர்த்தொகுதியை கொண்ட இராவணன் மீசை , எழுத்தாணிப்பூண்டு , அடம்பன் கொடி , தாழை மற்றும் தென்னை மரங்கள் அழிந்து காண்பதற்கு கூட அரிதாகவே உள்ளன. கிழக்கு மாகாணத்தில் பொதுவாக அம்பாறை மாவட்டத்தின் கடற்கரை பிரதேசங்களில் இப்போதுள்ள சந்ததியினருக்கு காண்பிப்பதற்கு கூட இவ்வாறான தாவரங்கள் இல்லாதிருப்பது கவலைக்குரிய விடயமாகும். அடம்பன் கொடி முயல் போன்ற விலங்குகள் விரும்பி உண்ணும் உணவாகவும் , இராவணன் மீசை கூரான இலைகளை கொண்டிருந்தால் விலங்குகளினால் தாவரங்களுக்கு

ஏற்படும் அழிவை தவிர்க்கக் கூடியதாகவும்.இருக்கும்.தென்னை மரங்கள் ஆழமான வேர்த்தோகுதியை கொண்டிருப்பதால் மண்ணரிப்பை குறைப்பதுடன் வேகமான காற்றை தடுக்கும் செயற்பாட்டையும் மேற்கொள்ளுகின்றது. இயற்கையான அருட்கொடைகளை தமது சுயநலத்திற்காக அழிக்க முற்படும் போது இயற்கையும் நமக்கெதிராக செயற்படும் என்பது உண்மையான விடயமாகும்.

## நகல்வடிவ தீர்மானத்திற்கு அலிசப்ரி கடும் எதிர்ப்பு

சமூகத்தின் ஆதரவே அவசியம் என அவர் தெரிவித்துள்ளார். தீர்மானமொன்று முன்வைக்கப்பட்டாலும் இல்லாவிட்டாலும் உள்நாட்டு பொறிமுறை மூலம் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் உறுதி செய்வது அரசாங்கத்தின் கடமை என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். இலங்கையர்கள் என்ற அடிப்படையில் பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் உள்நாட்டு பொறிமுறை மூலம் உருவாக்குவது எங்களின் கடமையாகும் இது தொடரும் என தெரிவித்துள்ள அலிசப்ரி அதற்கு அப்பால்பட்ட எதுவும் எந்த சர்வதேச பொறிமுறையும் எங்கள் அரசமைப்பினை மீறும் வகையில் அமைந்திருக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார். போதிய ஆதரவு இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாங்கள் இந்த தீர்மானத்தை எதிர்ப்போம் ஏனென்றால் எங்களால் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வேதனத்தை அன்பளிப்பு செய்த தவிசாளர்





**செல்லையா. பேரின்பராசா**

நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் அ.ஆனந், தனக்கு கிடைக்கும் தவிசாளருக்கான மாதாந்த சம்பளத்தை பொதுப்பணிகளுக்காக அன்பளிப்பு செய்து வருகின்றார். இதில் ஒரு அங்கமாக மத்தியமுகாம்11ஆம் கிராம பாரதி முன்பள்ளி. 12ஆம் கிராம அல்-சிறாஜ் தேசிய பாடசாலை மாணவர்களின் நலன் கருதி தனது மாதாந்த வேதனத்தை அன்பளிப்பு செய்வதை படத்தில் காணலாம்.

# தென்கொரியா பிரதி சுற்றாடல் அமைச்சருடன் அமைச்சர் நஸீர் அஹமட் முக்கிய பேச்சு



**ந.குகதர்சன்**

தென்கொரியாவில் நடைபெற்ற பசுமைக் காலநிலை மாநாட்டில் பங்கேற்ற சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் அந்நாட்டின் பிரதி சுற்றாடல் அமைச்சர் யோ ஜேசுல் அவர்களை சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்தியுள்ளார். தென்கொரியாவின் பரடைஸ் ஹோட்டலில் 14 முதல் 16 வரை நடைபெற்ற இம்மாநாட்டில் ஆசிய, பசுபிக் சமுத்திர நாடுகளின் அமைச்சர்கள் பங்கேற்றுள்ளனர். சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றங்களை கட்டுப்படுத்துவதற்கான உபாயங்கள் பற்றி அமைச்சர் நஸீர் அஹமட், மாநாட்டில் கலந்து கொண்டோருடன் பேச்சுக்களை நடத்தினார்.

அத்துடன் தென்கொரியா நாட்டின் பிரதி சுற்றாடல் அமைச்சர் யோ ஜேசுல் அவர்களை சியோலில் சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடாத்தினார். இலங்கையில் சுற்றாடல் துறையுடன் சம்பந்தப்பட்ட சுற்றாடல் மேம்பாடு, கனிய மணல் அகழ்வு தொடர்பிலும் புதிய திட்டங்களை உருவாக்குவதற்கு அந்நாட்டு அமைச்சர் நிதியுதவி வழங்க இணக்கம் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கை – தென்கொரியா விவசாயிகளின் பரஸ்பர தொழிநுட்ப மற்றும் பாரம்பரிய நடைமுறைகளை பகிரந்து கொள்வது குறித்தும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. சுற்றாடல் துறையில் இருதரப்பு ஒத்துழைப்புக்களை வலுப்படுத்துவது குறித்தும் ஆர்வம் காட்டப்பட்டது. மேலும் இத்துறைக்கு ஒத்துழைத்து நிதியுதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதானிகளையும் அமைச்சர் நஸீர் அஹமட் இதன்போது சந்தித்தார். இதன்போது சுற்றாடல், காலநிலை மாற்றம் மற்றும் இதர விடயங்கள் குறித்தான திட்டங்களை இலங்கையில் ஆரம்பிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன் நிதியுதவி வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்கள், முகவர் நிறுவனங்களுடன் அமைச்சர் ஹாபிஸ் நசீர், அங்கு நடாத்திய பேச்சுவார்த்தையின் விளைவாக சுற்றாடலுடன் தொடர்புடைய திட்டங்களை நிறைவேற்ற பெருமளவான நிதியுதவிகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமலையில் இரண்டு பிள்ளைகளின் தந்தை வெட்டிக்கொலை

**ரவ்பீக் பாயிஸ்**

திருகோணமலை தலைமையாக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேதீஸ் புர பிரதேசத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் வெட்டுக்காயங்களுடன் சடலமாக நீக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை தலைமையக பொலிசார் தெரிவித்தனர். குறித்த சம்பவம் நேற்றுமுந்தினம் – 12 நள்ளிரவு ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளதாகவும் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட திருகோணமலை மகமாயபுர பிரதேசத்தை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆர்.பி.பிரதீப் கெலும் (வயது–34) எனவும் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது., நேற்று முந்தினம் நண்பர்களுடன் விருந்து உபசாரத்தில் ஈடுபட்டிருந்ததாகவும் பின்னர் நள்ளிரவு வேலை குறித்த நபர் சடலமாக மீட்கப்பட்ட தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# காணி விடுவிப்பு தொடர்பான கலந்துரையாடலும் களவிஜயமும்



**எப்.முபாரக்**

தம்பலகாமம் பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட வன பாதுகாப்பு திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கடவான ,அட்டவானை நிலப் பகுதிகளை விடுவித்து உரியவர்களுக்கு வழங்குவதற்கான ஆரப்ப கட்ட களவிஜயம் சனிக்கிழமை (17) தம்பலாகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. இதில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரள, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பிஎச்என்.ஜயவிக்ரம உட்பட வன ஜீவராசி பாதுகாப்பு,சுற்றாடல் , நில அளவை, காணி பயன்பாட்டு திணைக்கள உயரதிகாரிகளும் கலந்து கொண்டு காணி விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு இப்பகுதிகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பிலும் அப்பகுதி மக்களிடம் மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டறிந்து கொண்டார்.

# கிரான் விவேகானந்தா பாடசாலையில் பற்சிகிச்சைப்பிரிவு ஆரம்பம்

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு கல்குடா வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட கிரான் விவேகானந்தா பாடசாலையில் பற்சிகிச்சைப்பிரிவு ஆரம்பம்பித்து வைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் அனைவரினதும் பற்களையும் வாய்ச்சுகாதாரத்தையும் பரிசோதனை செய்து தேவையானவர்களுக்கு சிகிச்சையளிக்கும் திட்டத்தின் ஊடாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனை பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றது. இச் செயற்திட்டத்தினை கல்குடா வலயத்தில் துரிதப்படுத்தும் முகமாக கிரான் விவேகானந்தா வித்தியாலயத்தில் நவீன னுநவெயட ஊாயசை உடனான பற்சிகிச்சைப்பிரிவானது மட்டக்களப்பு பிராந்திய பற்சிகிட்சை நிபுணர் வைத்தியகலாநிதி முரளிதரனின் முயற்சியுடன், டீழைஅநன நுபெநைநச, வலயக்கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி, பாடசாலை அதிபர், பாசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்டோரின் பூரண ஒத்துளைப்புடன் குறித்த பற்சிகிச்சைப்பிரிவானது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள பற்சிகிச்சைப் பிரிவினூடாக இப்பாடசாலையை அண்மித்துள்ள ஏனைய பாடசாலை மாணவர்களும் இதன்மூலம் பயனடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறித்த பற்சிகிச்சைப்பிரிவின் ஆரம்ப நிகழ்விற்கு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி குணசிங்கம் சுகுணன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பற்சிகிச்சைப்பிரிவை ஆரம்பித்து வைத்துள்ளார்.குறித்த நிகழ்வில் மட்டக்களப்பு பிராந்திய பற்சிகிட்சை நிபுணர் வைத்தியகலாநிதி முரளிதரன், பாடசாலை சமூகத்தினர் கலந்து கொண்டனர்

# செய்முறைப் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்படவில்லை : பெற்றோர் விசனம்

**(அ . அச்சுதன்)**

கடந்த 2021க.பொ.த (சா.ஃத) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தொடங்கவுள்ளதாக பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ள நிலையில் திருகோணமலை மாவட்ட மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை திணைக்களத்தால் அனுப்பப்படவில்லை. ஹஇது விடயமாக கல்வி அதிகாரிகளிடம் கோரிய போதும் அவர்கள் பாடசாலை அதிபர்களிடம் இணையத்தில் பதிவிறக்கம் செய்து வழங்குமாறு கூறுகின்றனர். முன்னைய காலங்கள் கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடி என்ற அசாதாரண நிலைகள் இருந்த போதிலும் தற்போது அவ்வாறான நிலமைகள் மாறியிருந்தும் பரீட்சை திணைக்களம் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் விடயத்தில் ஏன் அநீதி இழைக்கின்றது என பெற்றோர் விசனம்தெரிவிக்கின்றனர். இனையத்தில் பதிவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளும் வசதி மாவட்டத்தில் அனைத்து பிரதேசங்களில் இல்லை என்பது அனைவரும் அறிந்ததே. இருந்தும் பரீட்சை திணைக்களம் இந்த விடயத்தில் பொடுபோக்காக இருப்பதன் காரணம் என்ன என பெற்றோர் கேள்வி எழுப்புகின்றனர். எனவே திருகோணமலை மாவட்டத்தில் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த அசௌகரிய நிலைமையை கல்வி அமைச்சு கவனத்தில் எடுத்தல் வேண்டும் என பெற்றோர் கோருகின்றனர்.

# நாற்றுக்கள் வழங்கி வைப்பு

**(அ . அச்சுதன்)**

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் அடங்கும் கப்பல்துறை, பீலியடி, மாங்காய் ஊற்று,கன்னியா, இலுப்பைக்குளம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வாழும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள, ஐந்நூறு ( 500) வறிய குடும்பங்களுக்குத் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் 300,000.00 ரூபா பெறுமதியான வீட்டுத்தோட்டம் செய்வதற்குரிய நாற்றுகளையும் விதைகளையும் நேற்று வழங்கியது. திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் திரு சண்முகம் குகதாசன் இந்த உதவிகளை வழங்கி வைத்தார். பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் திரு பொன்னம்பலம் . தனேஸ்வரன், பட்டணமும் சூழலும் பிரதேச சபை முன்னாள் துணைத் தலைவர் திரு வெ.சுரேஷ்குமார் பட்டணமும் சூழலும் பிரதேச சபை உறுப்பினர் திருமதி இராசலெட்சுமி அம்மா மற்றும் திரு நே.சந்திரமோகன் கிராம அலுவலர்கள்,அபிவிருத்தி அலுவலர்கள், விவசாய அலுவலர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES

# தொடர் இனச்சுத்திகரிப்பால் தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறி கொண்டிருக்கின்றனர்




(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையில் தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீது இனச்சுத்திகரிப்பை இலங்கை அரசு மேற்கொண்டு வருகின்றது , இதன் விளைவாக தமிழ் மக்கள் மிகுந்த அம்சத்தில் வாழ்வதோடு நாட்டை விட்டும் வெளியேறிக் கொண்டும் வருகின்றனர். இவ்வாறு ஜெனீவாவில் ஐ.நா. பிரதான மாநாட்டு மண்டபத்தில் உரையாற்றிய மாணவர் மீட்பு பேரவை தலைவரும், மனித உரிமை செயற்பாட்டாளருமான பொறியியலாளர் கலாநிதி செல்வராசா கணேஷ் தெரிவித்தார். 191 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும்

தெரிவிக்கையில்., புத்தர் சிலைகளை நட்டு தமிழர்களின் நிலங்களை அபகரிப்பு செய்கின்றனர் , அத்தோடு நான் வாழ்கின்ற இலங்கையின் கிழக்குப் பகுதியில் உள்ள மாவட்டமாகிய அம்பாறை மாவட்டத்திலே பொத்துவில் பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட கனகர் கிராமம் எனும் கிராமத்து மக்கள் இலங்கை இராணுவத்தின் கெடுபிடி காரணமாக கடந்த 1990 ம் ஆண்டு அக்கிராமத்தில் இருந்து வேறு கிராமங்களுக்கு தஞ்சம் புகுத்தனர் , ஆனால் அன்றிலிருந்து இன்றுவரை தங்களது சொந்த இருப்பிடம் செல்வதற்காக தொடர்ந்தும் 32 ஆண்டுகளாக போராடி வருகின்றனர் , இலங்கை அரசோ தொடர்ந்தும் அவர்களின் அடிப்படை உரிமையை வழங்காது தடுத்து வருகின்றனர் இதிலே ஏறத்தாழ 700 ஏக்கருக்கும் மேற்பட்ட 300 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு தாங்களின் வாழ்வாதாரம், பிள்ளைகளின் கல்வி, போன்றவற்றை பெற்றுக் கொள்ள மிகவும் சிரமப் பட்டுக் கொண்டிருக்கின்றனர், அத்தோடு இலங்கையின் கிழக்கேயுள்ள மட்டக்களப்பு எனும் மாவட்டத்தில் உள்ள , செங்கலடி பிரதேச செயலக எல்லைக்குப்பட்ட மயிலத்தமடு மாதவனை எனும் பிரதேசத்தில் தமிழ் மக்களால் தங்களது வாழ்வாதாரத்திற்கு என பயன்படுத்தப்படும் மேய்ச்சல் தரையினையை சிங்கள குடியேற்றம் செய்து வருகின்றனர் இதன் நிமித்தம் 400,000 க்கும் மேற்பட்ட கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன, அத்தோடு இதே பிரதேச செயலக எல்லைக்குப்பட்ட கிராமத்தில் 1600 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தை இராணுவம் அபகரித்துள்ளது, அத்தோடு வெல்லாவெளி எனும் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கெவுளியாமடு எனும் கிராமத்தில் உள்ள 500 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தை இலங்கை அரசு அபகரித்துள்ளது, எனவே இனப் படுகொலையின் அங்கங்களாகவுள்ள இவ் பௌதீக வளங்கள் அபகரிப்பானது தொடர்ந்து செல்கின்றது எனவே மிக மோசமான இன அழிப்பை தமிழர்கள் மேல் இலங்கை அரசு மேற்கொண்டு வருகின்றது.

வலுக்கட்டாயமாக நிலம் கையகப்படுத்துவது குறித்து விசாரிக்க சிறப்பு அறிக்கையாளரை நியமிக்குமாறு ஐ.நா.வை வலியுறுத்துகிறோம். தமிழர்களுக்கு எதிராக குற்றங்களை இழைத்த போர்க்குற்றவாளிகளை அடையாளம் காண ஐ.நா.வை வலியுறுத்துகிறோம். அவர்கள் மீது ஐசிசி நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரை செய்யவும் வேண்டுகின்றோம், இறுதியாக உறுப்பு நாடுகள் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஆம் அரசியல் தீர்வை வழங்க வேண்டும். சிங்கள அரசை தமிழர்கள் நம்ப மாட்டார்கள்.

# அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை




நம் நாட்டின் ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் முன்னோடிகளுள் ஒருவரான தெல்தோட்டை மண் ஈன்றெடுத்த அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் அவர்கள் இலக்கிய உலகுக்கு ஆற்றிய அரும்பணிகள் பற்றி இளம் தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லும் நோக்கில் இந்த வருடமும் நினைவுப் பேருரையொன்றை நடாத்த தெல்தோட்டை ஊடக மன்றம் திட்டமிட்டுள்ளது.

இந்த வருடத்திற்கான நினைவுப் பேருரை "தெல்தோட்டை – புதியதோர் மாற்றத்தை நோக்கி" என்ற கருப்பொருளில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 24ம் திகதி (சனிக்கிழமை) மு.ப. 9.30 மணி முதல், தெல்தோட்டை, புலவர் மலை அடிவாரத்தில் அமைந்துள்ள, கஃஎனசல்கொல்ல மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற உள்ளது. நினைவுப் பேருரையினை கலாநிதி ரவூப் ஸெய்ன் (நளீமி) நிகழ்த்த உள்ளார்.

இந்நிகழ்வின் மற்றுமொரு முக்கிய அம்சமாக அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரை ஜனரஞ்சகப்படுத்தும் நோக்கில் 1965இல் புலவர் பிறந்த நூற்றாண்டு விழாவின் போது புலவர் பற்றிய சிறப்பிதழொன்றை வெளியீட்டமைக்காக தினகரன் தேசிய நாளிதழிற்கும், புலவர் இயற்கையெய்திய நூற்றாண்டினை அனுஷ்டிக்கும் வகையில் 2018ம் ஆண்டு ஜ/ன் மாதம் ஞானம் சஞ்சிகையின் 217ஆவது இதழை புலவர் பற்றிய சிறப்பிதழாக வெளியிட்ட ஞானம் சஞ்சிகையின் இணை ஆசிரியர் வைத்தியர் ஞானம் ஞானசேகரன் அவர்களுக்கும், புலவர் பற்றிய சிறப்பிதழொன்றை வெளியிட்ட தென்னிந்தியாவின் இளம்பிறை எம். ஏ. ரகுமான் அவர்களுக்கும் தெல்தோட்டை ஊடக மன்றமானது, 'அருள்வாக்கி நேசன்' விருது வழங்கி பாராட்டி கௌரவிக்க உள்ளது.

மேலும், தெல்தோட்டை பிரதேச முஸ்லிம் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு, அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் பற்றி எழுதப்பட்ட சிறப்பு பாடல் வெளியீடு, அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவு மலர் வெளியீடு உட்பட இன்னும் பல நிகழ்வுகள் அன்றைய தினம் இடம்பெற உள்ளன.

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகராக திருமதி டயாழினி

த.சுபேசன்



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக திருமதி டயாழினி மகேந்திரன் 16ஃ09 வெள்ளிக்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக கடந்த 4வருடங்கள் கடமையாற்றிய நிலையில் இடமாற்றம் கிடைத்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக் கடமைகளை அவர் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வருகைகூடிய மாணவர்கள் நட்சத்திர சின்னம் வழங்கி கௌரவிப்பு




(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட நாவிதன்வெளி பிரதேச சொறிக்கல்முனை திருச்சிலுவை மகாவித்தியாலயத்தில் முதலாவது தவணையின் மொத்த 59 பாடசாலை நாட்களில் 55 நாட்களுக்கு மேல் வருகை தந்த மாணவர்களுக்கு நட்சத்திர சின்னம் வழங்கி பாராட்டப்பட்டது. இவ் வைபவம் பாடசாலை அதிபர் அருட்சகோதரி சிறிய புஷ்பம் தலைமையில் நடைபெற்றது.

வலய உடற்கல்வி உதவி கல்வி பணிப்பாளர் ஏ.முஸ்ரக்அலி ஆசிரிய ஆலோசகர் எஸ்.குணசீலன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர். தரம் 1 இல் ஆர். ஜெலீனா கிறிஸ்ரின் 56 நாட்கள் எஸ். டோனா ஹரீன் 56 நாட்கள், தரம் 2 இல் ரி. ஹரின் அமிக்கோ 55 நாட்கள், தரம் 3 இல் ஆர். கஸ்மிக்கா 59 நாட்கள், தரம் 4 இல் வி.பேபி ஷர்மி 57 நாட்கள், பி.ஆன் அபிஷேக்கா 57 நாட்கள், தரம் 5இல் எஸ்.செரோன் 59 நாட்கள், எஸ்.ஜெதுர்சன் 59 நாட்கள், தரம் 7இல், எஸ். டனோஜிக்கா 58 நாட்கள் எஸ் பிரியதர்சிக்கா57 நாட்கள். தரம் 9 இல் ஜெ. சரோன் 59 நாட்கள், பி.வை. தீபசிக்கா 59 நாட்கள், தரம் 12இல், யூ.ஜென்சி 57 நாட்கள், ஆர்.. நிதர்சினி 55 நாட்கள்பாடசாலைக்கு வருகை தந்திருந்தனர்.ஏனைய மாணவர்களின் முன்னிலையில் குறித்த சாதனை மாணவர்கள் நட்சத்திர சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# இந்து ஆலயங்களில் தொல்பொருள் திணைக்களம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துமாறு கோரி கையெழுத்து வேட்டை





(ந.குகதர்சன்)

இந்து ஆலயங்களில் தொல்பொருள் திணைக்களம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துமாறு கோரி மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் நாட்டின் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்புவதற்கு கையெழுத்து வேட்டை வாகரை கதிரவெளி பிரதேசத்தில் இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை தலைவரும், கிழக்கு இந்து ஒன்றிய தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீனித்தம்பி யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கையெழுத்து வேட்டையில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு மகஜரில் கையெழுத்தினை வைத்தனர்.

நாட்டின் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, கிழக்கு மாகாணத்தில் பிரசித்தி பெற்று விளங்கும் தேவாரப்பாடல் பெற்ற தலமும் இராவணனால் வழிபடப்பட்ட தலமும் இலங்கையில் விஜயனின் வருகைக்கு முற்பட்ட தலமுமான திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயம் தற்போது தொல்பொருள் திணைக்களத்தால் பாதிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாலய அபிவிருத்திகள் இவர்களால் தடுக்கப்படுகின்றது. இதேவேளை பதினெட்டு ஏக்கர் பரப்பளவு உடைய இவ் ஆலய எல்லையில் தொல்பொருள் திணைக்களம் பெரும்பான்மை இனத்தின் வியாபார நிலையங்களுக்கு அனுமதி வழங்கி ஆலய பரிபாலன சபையினருக்கு பிரச்சனையை தோற்றுவிக்கின்றனர்.

எனவே இன மத பேதமற்று செயற்படும் தாங்கள் இவ் ஆலயத்தினை தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிப்பதுடன் ஆலய பரிபாலன சபை சுயமாக தமது வேலைத்திட்டத்தை மேற்கொள்ளவும், அத்துமீறி ஆலய காணியில் அமைக்கப்பட்டிருக்கும் வியாபார நிலையங்களை அகற்றவும் நடவடிக்கை மேற்கொண்டு உதவுமாறு கிழக்கு மாகண இந்துக்களாகிய நாங்கள் தங்களை பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் சங்கமக்கண்டி மலை தொடக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் தாந்தாமலை, இசானமலை, வேல் ஓடு மலை மைல்தங்கிய மலை, குடும்பி மலை உட்பட திருகோணமலை மாவட்டத்தில் கல்லடி நீலியம்மன் மலை, குஞ்சிதபாத மலை (இலங்கைத்துறை முகத்துவாரம்), கங்குவேலி அகஸ்தியர் ஸ்தாபனம், திரியாய் மலை உ்பட கிழக்கு மாகாணத்தில் இருந்து இந்து ஆலயங்கள் அமைந்துள்ள பகுதிகளையும் இந்துக்களின் பூர்வீக இடங்களையும், வடக்கே குருந்தூ ர் மலை உட்பட்ட இந்து ஆலயங்கள் அமைந்துள்ள இடங்களையும் இந்துக்களின் பூர்வீக இடங்களையும் தொல்பொருள் என்ற வகையில் கடந்த கால இத்துவேச அரசாங்கங்கள் சுவீகரிக்க மேற்கொண்ட நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தி இவற்றை தொல்பொருள் திணைக்கள செயற்பாட்டில் இருந்து விடுவித்து இந்துக்களின் புனித நடவடிக்கைகளுக்கு உதவி நல்குவதுடன் இந் நாட்டு பூர்வீக குடிகளும் இந்நாட்டு தேசிய இனமுமான நாங்கள் இன மத முரண்பாடு அற்று அனைத்து மக்களையும் இந்நாட்டு மக்களாக கருதும் மனம்படைத்த தங்களிடம் அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

அனைத்து கிழக்கு மாகாண இந்துக்கள் சார்பாக, கிழக்கு இந்து ஒன்றியமும் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையும் வெருகல் மண்டூர் யாத்திரை அடியார்களும் இவ்விடயங்களை தங்கள் கவனத்துக்கு தருகின்றோம் என மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# மன்னார் மறைமாவட்டத்தில் பணியாளர்கள் குறைவு

## ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை



(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறைமாவட்டத்தில் பணி வாழ்வுக்கான தேவ அழைத்தல்கள் குறைந்து செல்வதால் இளைஞர் யுவதிகள் உறுதிப்பூசுதல் என்னும் திருவருட்சாதனம் பெறுகின்ற உங்கள் மத்தியில் இதற்கான அழைப்பின் குரல் கேட்கும்போது அதற்கு செவிமடுக்க வேண்டும் என இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

பேசாலை பங்காகிய புனித வெற்றிநாயகி ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (18.09.2022) பங்கு தந்தை அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளாரின் அழைப்பை ஏற்று 71 இளைஞர் யுவதிகளுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகையினால் உறுதிபூசுதல் என்னும் திருவருட்சாதனம் வழங்கும் திருச்சடங்கில் ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தனது மறையுரையில் தொடர்ந்து தெரிவிக்கையில்

பேசாலை பங்கில் இளைஞர் யுவதிகளுக்கு உறுதிப்பூசுதல் என்னும் திருவருட்சாதனம் வழங்குவதற்கு இறைவன் சித்தம் கொண்டுள்ளார். இறைவனின் சித்தத்தின்படி நாம் வாழந்து கொண்டு இருக்கின்றோம். அவரே நமக்கு வாழ்வை தந்து கொண்டிருக்கின்றார். அவரே நம்மை வாழ வைப்பதால் அவரிடமிருந்தே அழைப்புக்களையும் பொறுப்புக்களையும் நாம் பெறுகின்றோம்.

இங்கு வீற்றிருக்கும் பிள்ளைகள் கடந்த மூன்று நான்கு மாதங்களாக இந்த உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தை பெறுவதற்காக தங்களை தயாரித்துள்ளனர். பங்கு தந்தையினர் மறையாசிரியர்கள் மற்றும் அருட்சகோதரிகளினால் இவர்கள் மறையறிவை கற்று மற்றும் பயிற்சிகளை பெற்றே இந்த அரட்சாதனத்தை பெறுவதற்காக தயார் நிலையில் இருக்கினறனர். ஆகவே நாம் இறைவனுக்கு நன்றி கூற வேண்டும் இவர்கள் தூய ஆவியின் கொடைகளை பெறுவதற்கு இறைவன் சித்தம் கொண்டமைக்காக. நாம் திருமுழுக்கு பெற்ற காலத்திலிருந்து இறைவனின் பிள்ளைகளாக வாழந்து வருகின்றபோதும் எமது வாழ்க்கை எப்பொழுதும் புனிதமாக இருக்கின்றதா என்பது சொல்ல முடியாது.

நாம் எமது குற்றம் குறைகளினால் பாவங்கள் பல செய்து வருகின்றோம். இவற்றிலிருந்து எம்மை மீட்கவே கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார். ஒப்புறவு திருவருட்சாதனத்தின் மூலம் நீங்கள் மனமாற்றம் பெற்று வருவீர்கள் என இறைவன் பார்த்துக் கொண்டு இருக்கின்றார். ஆகவே நாம் பொறுப்புள்ள பிள்ளைகளாக வாழ வேண்டும் என இறைவன் எம்மை நோக்கி பார்த்துக் கொண்டு இருக்கின்றார்.

பிள்ளைகளே அன்று நீங்கள் திருமுழுக்கு பெற்றபோது உங்கள் சார்பாக உங்கள் ஞான பெற்றோர் வாக்குறுதி வழங்கினர். இன்று நீங்கள் முழு உள்ளத்தோடு அதை புதுப்பிக்கின்றீர்கள். இதன் மூலம் நீங்கள் தூய ஆவியானவரில் நம்பிக்கை கொண்டவர்களாக காணப்படுகின்றீர்கள். திருஅவையை ஏற்றுக்கொள்வதுடன் புனிதர்களின் உறவை விசுவசிப்பராகவும் நீங்கள் இருக்கின்றீர்கள்.

இன்றைய காலக்கட்டத்திலே திருச்சபையில் அங்கம் வகித்தவர்கள் எம்மை விட்டு விலகி வேறு வழிக்குச் சென்று விட்டனர். அவர்களிடம் விசுவாசம் அற்ற நிலை காணப்பட்டமையாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவேதான் நாம் எமது நம்பிக்கையில் உறுதியாக இருக்க வேண்டும். நாம் மூவிரு கடவுளில் நம்பிக்கை வைப்பதுபோல திருச்சபையிலும் நம்பிக்கை கொள்ள வேண்டும். உங்கள் நாளாந்த வாழ்க்கையில் இறைவனுக்காக பணி செய்ய தயாராக இருக்க வேண்டும். நாம் ஒன்றிப்பு , பங்கேற்பு , பணி என மூன்றையும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். மன்னார் மறைமாவட்டத்தில் தேவ அழைத்தல்கள் குறைந்து கொண்டு போவதனால் பணி வாழ்வுக்கு எதிர்காலம் எப்படியாகுமோ என்ற ஐயப்பாடு தோன்றுகின்றது.

பணி வாழ்வுக்காக உங்களுக்கு அழைப்பு கிடைக்கும்போது பிள்ளைகளாகிய நீங்கள் செவி சாய்க்க வேண்டும். இதற்காக பரிசுத்த ஆவியின் கொடைகள் உங்களுக்கு நிறைவாக கிடைக்கட்டும். பல பிரச்சனைகள் மத்தியில் வாழும் நாம் அதிலிருந்து விடுபடவும் இன்றையத் திருப்பலியில் வேண்டிக் கொள்வோம் என இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

# சமுர்த்தி சிப்தொற புலமைப்பரிசில் வழங்கி வைப்பு



சமுர்த்தி திட்டத்தில் சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனுகரிகளின் பிள்ளைகள் க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்கும் சகல மாணவர்களுக்கும் 24 மாதங்களுக்கு 1500 ரூபாய் என்கின்ற அடிப்படையில் இப்புலமை பரிசில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் வழங்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் கோறளைப்பற்று மேற்கு(ஓட்டமாவடி) பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட சமுர்த்தி நிவாரனம் பெறும் பயனாளிகளின் குடும்பங்களில் இருந்து சுமார் 154 மாணவ, மாணவிகளுக்கு சமுர்த்தி சிப்தொற புலமைப்பரிசில் சான்றிதழ்களை கோறளைப்பற்று மேற்கு(ஓட்டமாவடி) பிரதேச செயலாளர் ஏ.தவராஜா அவர்கள் வழங்கி வைத்தார்.

கோறளைப்பற்று மேற்கு(ஓட்டமாவடி) பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் எம்.ஐ.ஏ.அஸீஸ் அவர்களின் தலைமையில் ஓட்டமாவடி மேற்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், கோறளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) பிரதேச செயலாளர் ஏ.தவராஜா அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு புலமை பரிசில் சான்றுகளை வழங்கி வைத்து, உரையாற்றுகையில் இக்கால கட்டத்தில் கல்வி கற்கும் ஒவ்வொருவருக்கும் இத்திட்டம் ஒரு வரப்பிரசாதமாகும். உயர்தரம் கற்பதற்கு தற்போது மிகப்பெரிய தொகையை மாதாந்தம் பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்காக செலவு செய்கின்றனர், இருந்த போதிலும் அதில் ஒரு பங்கை ஈடுசெய்வதற்கு சமுர்த்தி திட்டம் உதவுகின்றது என்றால் அது அக் குடும்பத்திற்கு பாரிய நன்மையான விடயமாகவே காணப்படுகின்றது என்றார்.

இந்நிகழ்வில் கோறளைப்பற்று மேற்கு(ஓட்டமாவடி) பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.எஸ். அல்அமீன் அவர்களும், கணக்காளர் எஸ்.ஏ.ஸஜ்ஜாத் அஹம்மட் அவர்களும், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ் அவர்களும், வங்கி முகாமையாளர் பி.எம்.சிஹான் அவர்களும், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் எம்.என். எம்.சாஜஹான் அவர்களும், விடய பொறுப்பு உத்தியோகத்தர் ஏ.ஆர்.சம்சுதீன், சமுர்த்தி கள உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# பயிர் கன்றுகள் வழங்கி வைப்பு



(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் படுவாங்கரைப் பிரதேசத்திற்குபட்பட்ட வெல்லாவெளியில் அப்பகுதியைச் சேர்ந்த 100 தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டுத்தோட்டம் மேற்கொள்வதங்கு மிளகாய் மற்றும் கத்தரிக்கன்றுகளும், சோளம், பயற்கை, கீரை, வெண்டி, உள்ளிட்ட விதைகளும், வீட்டுத் தோட்டம் தொடர்பிலான கையேடுகளும் சனிக்கிழமை மாலை(17) வழங்கி வைக்கப்பட்டன.

லண்டனில் அமைந்துள்ள றே ஓவ் ஹோப் (**RAY HOP PEOPLE LONDON**) நிறுவனத்தின் நிதி அனுசரணையில் நாமே நமக்கு **(NAAME NAMAKKU C I C LONDON WALES)** எனும் அமைப்பினூடாக வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது அப்பகுதி பொதுசுகாதர பரிசோதகர் குபேரன், நமக்காக நாம் அமைப்பின் பிரதிநிதிகள், தொண்டர்கள், பயனாளிகள் உள்ளிட்ட பலரும், இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஈடுகொடுக்கும் முகமாக நாம் ஒவ்வொருவரும் வீட்டுத் தோட்டங்களை மேற்கொள்ளும் பட்சத்தில் ஓரளவுக்ககேனும் நாம் உணவு நெருக்கடிகளை எதிர் கொள்ளலாம். எனவே எவரும் வீட்டில் வீணாக பொழுதைக் கழிக்காமல் வீட்டுத் தோட்டங்களில் ஈடுபட்டு, அதிலிருந்து கிடைக்கும் விளைச்சல்களை உணவுத் தேவைக்கு எடுத்துவிட்டு மீகுமியை விற்பனை செய்து அதனூடாகவும் சிறிய வருமானத்தையும் ஈட்டிக்கொள்ள முடியும் என இதன்போது கலந்து கொண்டிருந்த பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

தமது தற்கால நிலமையறிந்து காலடிக்கே பயிரினங்களைக் கொண்டு வந்து தம்மை வீட்டுத் தோட்டச்செய்கையில் ஈடுபடத் தூண்டியதற்காக சம்மந்தப்பட்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதான் இதன்போது அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# மாகாண மட்ட எல்லே போட்டியில் பங்கு பற்றும் வீரர்களுக்கான சீருடை அறிமுக நிகழ்வு



ந.குகதர்சன்

மட்.மம. ஓட்டமாவடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் இம்முறை மாகாண மட்ட எல்லே போட்டி நிகழ்ச்சிக்காக செல்லும் வீரர்களுக்கான புதிய சீறுடை அறிமுக நிகழ்வு பாடசாலை மாணவர் நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் பொறுப்பாசிரியர் **A.G.**அஸீஸ்/ல் றஹீம் தலைமையில் இடம் பெற்றது நிகழ்வின் பிரதம அதிதியாக கல்லூரி முதல்வர் அல்ஹாஜ் ஆயு.ஹலீம் இஸ்ஹாக் கலந்து கொண்டதுடன் கௌரவ அதியாகவும் வீரர்களுக்கான புதிய சீறுடைக்கான பூரண அனுசரனை வழங்கிய **Haya international collection (Pvt)Ltd** மற்றும் **Haya social foundation** ஆகிய வற்றின் பணிப்பாளர் யுடு.நஜிமுதீன் அவர்களும் ஏனைய அதிதிகளாக பாடசாலையின் பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்களான **MLM**.நஜீம் ஆசிரியர். **ULM**.றியாஸ் ஆசிரியர், **JM**.றிஸ்வான் ஆசிரியர், ஐ.அலாப்தீன் ஆசிரியர், மற்றும் ஆஐஆ.முஸம்மில் ஆசிரியர் அவர்களும் கலந்து கொண்டனர்.

மாணவர்களை எல்லே விளையாட்டுப் போட்டிக்காக பயிற்று வித்த உடற்கல்வி ஆசிரியர் **AM**. முஹமட் ஜிப்ரி அவர்கள் அதிபர் அவர்களினால் பாராட்டப் பட்டதோடு, நிகழ்வின் அதிதியும் அனுசரனையாளருமான யுடு.நஜிமுதீன் அவர்களுக்கு அதிபர் அவர்களினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. எல்லே விளையாட்டு வீரர்களுக்கான புதிய சீருடைக்கான பூரண அனுசரனை வழங்கிய **Haya international collection (Pvt)Ltd** பணிப்பாளர் **AL**.நஜிமுதீன் அவர்களுக்கு மாணவர் நலன்புரி அமைப்பினால் விஷேடமாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

# அட்டப்பள்ளம் சித்தி விநாயகர் ஆலய மகா சங்காபிஷேக பாற்குடபவனி



(வி.ரி.சகாதேவராஜா)

நிந்தவூர் ,அட்டப்பள்ளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்டபக்ச மகா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து சங்காபிஷேக பாற்குடபவனி நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் கிரியைகளை சிறப்பாக நடாத்தினார்கள். ஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டனர். கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மண்டல அபிஷேக பூசைகள் நடைபெற்று வந்தன.

# “ நான்கு நூல்கள்” அறிமுக நிகழ்வு



ரவ்பீக் பாயிஸ்

அருட்பணி கலாநிதி “வே.அந்தனி ஜான் அழகரகன்” அடிகளாரின் “ நான்கு நூல்கள்” அறிமுக நிகழ்வு நேற்று (18) திருகோணமலை கல்லூரி வீதியில் அமைந்துள்ள ஜூபிலி மண்டபத்தில் வேளியிடப்பட்டது. இந் நிகழ்வு இறைவணக்கத்துடன் ஆரம்பமாகி மங்கல விளக்கேற்றலுடன் வரவேற்புரையை செல்வி தேவகாந்தன் பியான்சினி வழங்கினார்

நூல் நயவுரையினை திருகோணமலை மறைமாவட்ட குருமுதல்வரான அருட்தந்தை தே.கிங்ஸிலி றொபர்ட்,திருகோணமலை மறைக்கல்வி நடுநிலை இயக்குனரான அருட்பணி சூ.டக்ளஸ் ஜேம்ஸ்,தம்பலகாமம் பாத்திமா தேவாலய பங்குத்தந்தை அருட்பணி சீ.றோ.ஜெயரட்ணம் மற்றும் கிழக்கு பல்கலைகழக சிரேஷ்ட விரிவுரையாளரான அருட்பணி அ.அ.நவரத்தினம் ஆகியோர் வழங்கினார்கள். வரவேற்பு நடனத்தை ரட்ணராஜா றொஷிற்றா பிரபாகரன் டிலோக்ஸனா ஆகியோர் வழங்க, தலைமையுரையை அ.அ.நவரத்தினம் அவர்களும்,ஏற்புரையை திரு முகில்வாண ன் இராசப்பா அவர்களும்,நன்றியுரையினை திருமதி மீரியம் டினோஜன் அவர்களும் நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொதுநலவாய போட்டியில் கலந்து கொள்ள சாவகச்சேரி இளைஞன் தகுதி



த.சுபேசன்

எதிர்வரும் நவம்பர்–டிசம்பர் மாதங்களில் நியூசிலாந்தில் இடம்பெறவுள்ள பொதுநலவாய போட்டியில் கலந்து கொள்வதற்கான தகுதியை சாவகச்சேரி இளைஞன் சற்குணராசா புசாந்தன் பெற்றுள்ளார். கடந்த மாதம் கொழும்பில் இடம்பெற்ற தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் தங்கப்பதக்கம் வென்று புதிய சாதனையை நிலைநாட்டிய நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொதுநலவாய போட்டியில் கலந்துகொள்ளும் இலங்கை அணியில் புசாந்தன் இணைக்கப்பட்டுள்ளார். இந் நிலையில் இலங்கை வலுத்தூக்கல் அணியை பிரதிநிதித்துவப்படுத்தி நியூசிலாந்து பொதுநலவாய வலுத்தூக்கல் போட்டியில் சாவகச்சேரி இளைஞன் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுவீஸ் நாட்டில் நாடுதழுவிய அறுவடை தினம்



**( வாஸ் கூஞ்ஞ)**

சுவீஸ் நாட்டில் ஞாயிற்றுக்கிழமை (18.09.2022) நாடுதழுவிய அறுவடை தினம் கொண்டாடப்பட்டது. அவ் வாழ் மக்கள் தங்கள் வீடுகளில் மற்றும் தோட்டங்களில் கடந்த யூன் மாதத்திலிருந்து இற்றை வரை உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களை தங்கள் மதத் தளங்களுக்கு கொண்டு சென்று இறைவனின் சந்நிதானத்தில் வைக்கப்பட்டு நல்ல விளைச்சலைத் தந்தமைக்காக இறைவனுக்கும் இயற்கைக்கும் நன்றி கூறும் நாளாக இந்நாளை அவ் நாட்டு மக்கள் அனுசரித்து வருகின்றனர். இதற்கமைய மெத்தாவூ என்னும் கிராமத்தில் புனித ரெமியூஸ் என்னும் ஆலயத்தில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி முதல் மரக்கறி மற்றும் பழ வகைகளை புலம் பெயர்ந்து வாழும் மன்னார் மாவட்டம் பறப்பாங்கண்டல் கிராமத்தைச் சேர்ந்தவரும் , இவ் கிராமத்தில் ஒரு சிறந்த விவசாயியாக திகழ்ந்தவரும் , தற்பொழுது சுவீஸ் நாட்டில் ஒரு மொழி பெயர்ப்பாளராகவும் நீண்ட காலமாக புனித ரெமியூஸ் ஆலயத்தில் திருப்பண்டம் பொறுப்பாளருமாகவும் , சுவீஸ் நாட்டின் வின்டீஸ் என்னும் கிராமத்தின் சமூக ஜனநாயக கட்சியில் போட்டியிட்டு கிராமோதய சபை உறுப்பினராகவும் திகழும் சந்தியாப்பிள்ளை கபிரியேல் என்பவர் தங்களால் உற்பத்தி செய்யப்பட்டு அறுவடை செய்த பொருட்களை ஆலய பீடத்தின் முன் வைத்து திருப்பலியின் ஊடாக இறைவனுக்கு நன்றி செலுத்தும் திருச்சடங்காகும் .

# எழுத்தாளர்களுக்கான செயலமர்வும் பிரதேச சாகித்திய விழாவும்



**ஹஸ்பர்**

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட மூதூர், கிண்ணியா, வெருகல் பிரதேச செயலக பிரிவிற்குற்பட்ட எழுத்தாளர்களுக்கான ஒன்றுகூடல் செயலமர்வும், பிரதேச சாகித்திய விழாவும் நேற்று(18) சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைமை விருந்தினராக கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர சரண்யா சுதர்சன் , முதன்மை விருந்தினராக திரு. இரா.இரத்தினசிங்கம் ஓய்வுநிலை அதிபர் அவர்களும் மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.அரூஸ், அனாமிகா பண்பாட்டு மைய பணிப்பாளர் பேராசிரியர் பாலசுகுமார் ,தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் அஷ்ரப் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள். கலை கலாசார நிகழ்வுகளும் இதன் போது அரங்கேற்றப்பட்டன.

இதில் மூதூர், கிண்ணியா, வெருகல் பிரதேச செயலக பிரிவிற்குறப்பட்ட எழுத்தாளர்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள், இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலரும் இந் நிகழ்வில் கலந்து தங்களின் பங்குபற்றுதலையும், கலந்துரையாடலையும் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கான வாண்மை வருத்தி ஒருநாள் செயலமர்வு





**பைஷல் இஸ்மாயில்**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கான வாண்மை விருத்தி ஒருநாள் செயலமர்வு (17) கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

மாகாணப் பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற இச்செயலமர்வுக்கு தென்கிழக்கு பல்கலைக்கழக தொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஏ.எப்.எம்.அஸ்ரப், ஓய்வுபெற்ற அதிபரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான திருமலை நவம், கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார சார்ப்புலம் பேராசிரியர் பாலசுகுமார் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டு கவிதை இலக்கியத்தின் பண்புகள் மற்றும் வடிவங்கள் பற்றியும், இலக்கியமும் இளையோரும், படைப்பாளிகளின் எல்லை விரிவாக்கம், கூத்து மற்றும் நாடக பிரத்தியாக்கத்தின் செயல்நெறி போன்ற தலைப்புக்களில் இச்செயலமர்வு இடம்பெற்றது. இச்செயலமர்வில் பல்துறை சார்ந்த 50 இற்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் கலந்துகொண்டனர்.

# மத குருமார்களுக்கும் மத ஸ்தாபன உறுப்பினர்களுக்குமான தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பான பயிற்சி



**வி.சுகிர்தகுமார்**

மத குருமார்களுக்கும் மத ஸ்தாபன சபை உறுப்பினர்களுக்குமான தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பான பயிற்சியும் அதனோடு இணைந்த விழிப்புணர்வு வேலைத்திட்டமும் இன்ரநெசனல் ரான்ஸ்பரன்ஸி நிறுவனத்திற்கான இலங்கை தலைமையகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வருகின்றது. இதற்கமைவாக அம்பாறை மாவட்ட நிறுவனங்களின் இணையத்தின் ஒருங்கிணைப்பில் மாவட்டத்தில் உள்ள இந்து, இஸ்லாமிய குருமார்கள் மற்றும் அவர்களுடன் இணைந்து ஆலயங்கள், பள்ளிவாசல் நிருவாக உறுப்பினர்கள், சர்வமத ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் பெரியவர்களுக்குமான விழிப்புணர்வு செயலமர்வு இன்று இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் வ.பரமசிங்கம் தலைமை பங்குபற்றலுடனும் பயிற்றுவிப்பாளரும் விடயத்துடன் தொடர்புபட்ட மாவட்ட இணைப்பாளருமாகிய ம.லக்ஷ்மிகாந்தின் நெறிப்படுத்தலின் அக்கரைப்பற்றில் அமைந்துள்ள இணைய மண்டபத்தில் நடைபெற்ற தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பான விழிப்பூட்டல் பயிற்சியில் இந்து இஸ்லாமிய மத தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் ரான்ஸ்பரன்ஸி இன்ரநெசனல் இலங்கை தலைமையக அதிகாரி திருமதி பிரியா போல்ராஜ் சூம் தொழில்நுட்பம் ஊடாக ஊழலுக்கு எதிரான புதிய நடைமுறை விளக்கங்களை வழங்கியமை விசேட அம்சமாகும்.

தொடர்ந்து அம்பாறை மாவட்ட நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் வ.பரமசிங்கம் மற்றும் பயிற்றுவிப்பாளரும் விடயத்துடன் தொடர்புபட்ட மாவட்ட இணைப்பாளருமாகிய ம.லக்ஷ்மிகாந்தினாலும் தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பான மேலதிக விளக்கங்கள் வழங்கப்பட்டது.

நிகழ்வில் கலந்து கொண்ட சமய தலைவர்கள் வழங்கப்பட்ட பயிற்சி நெறி தொடர்பில் மகிழ்ச்சி அடைந்ததுடன் தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பான புதிய விடயங்கள் பலவற்றை அறிந்து கொண்டதாகவும் இதனை பொதுமக்கள் மத்தியில் தாம் விழிப்புணர்வூட்டவுள்ளதாகவும் கூறினர். மேலும் இச்செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ள இன்ரநெசனல் ரான்ஸ்பரன்ஸி நிறுவனத்திற்கான இலங்கை தலைமையகத்திற்கும் ஏனையவர்களும் பயிற்சி நெறியினை வழங்கியவர்களும் நன்றி தெரிவித்தனர்.

# வாகரையில் தேசிய மரநடுகை தின பிரதான நிகழ்வு



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

நாட்டின் வறுமையை இல்லாமல் செய்வதற்கு அரசாங்கத்தினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கமைவாக சமுர்த்தி திணைக்களத்தினால் "சமுர்த்தி பசுமை நிற தாயக அறுவடை" எனும் தொனிப்பொருளில் தேசிய மரநடுகை தின சுற்றாடல் வேலைத்திட்ட மர நடுகை வாரத்தினை இன்று 17.09.2022 திகதி தொடக்கம் 23.09.2022 திகதி வரை பிரகடனப்படுத்தி மரம் நடுகை வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பிரதான மரநடுகை நிகழ்வு வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் காயங்கேணி கிராமத்தில் இடம் பெற்றுள்ளது.

வாகரை பிரதேச செயலாளர் ஜி.அருணன் தலைமையில் காயங்கேணி மீனவர் சங்க கட்டட வளாகத்தில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதயாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்து கொண்டதுடன் சிறப்பு அதிதிகளாக உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், சமுர்த்தி மாவட்ட தலைமையக முகாமையாளர் ஜே.எஸ்.மனோகிதராஜ், காயங்கேணி சரஸ்வதி வித்தியாலய அதிபர் எஸ்.மோகனசுந்தரம், வாகரை பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி கே.கலைவாணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பத்துள்ளனர். இதன்போது பலா, தேக்கு, கூலா போன்ற மரக்கன்றுகளும் பனை விதைகளும் அதிதிகளால் நடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# 'வன்முறைக்கெதிரான வெற்றி" செயற்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு





**(கல்லடி நிருபர்)**

''வன்முறைக்கெதிரான வெற்றி" செயற்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு மட்டக்களப்பு கல்லடியில் இடம்பெற்றுள்ளது. தேவை நாடும் மகளீர் அமைப்பு, யூ.எஸ்.எயிட் இன் நிதியுதவியின் மூலம் "வன்முறைக்கு எதிரான வெற்றி" செயற்திட்டத்தின் ஊடாக பாலியல் பால்நிலைக்கெதிரான வன்முறைகளை இனங்கண்டு அவற்றிலிருந்து வெற்றிக் கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ள நிலையில் இந்த செயற்றிட்டத்தின் ஊடாக, பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்கவும், மாவட்ட, பிராந்திய மற்றும் தேசிய ரீதியில் செயற்படுவதற்கான நான்காண்டுகாலப் பயணத்தின் ஆரம்ப நிகழ்வின் அங்குரார்ப்பணமே இடம்பெற்றுள்ளது.

இச் செயற்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்விற்கு பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந்த் மற்றும் திருமதி.நவரூப ரஞ்ஜினி முகுந்தன் ஆகிய இருவரும் கலந்துகொண்ட நிகழ்விற்கு சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன், கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி பாரதி கெனடி, மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் ந.பிரபாகரன், விசேட உளநல வைத்திய நிபுணர் த.கடம்பநாதன், மாவட்ட சிறுவர் பெண்கள் பிரிவின் பொறுப்பதிகாரி சந்துனி எதிரிசிங்க, பிராந்திய சுகாதார பணிமனையின் வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட ஏனைய துறைசார் அதிகாரிகளும், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளும் கலந்து சிறப்பித்ததுடன், தமது ஆலோசனையினையும் தெரிவித்திருந்தனர்.

இதன்போது தேவை நாடும் மகளீர் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்திட்டங்கள் தொடர்பாகவும், எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளவுள்ள திட்டங்கங்கள் தொடர்பாகவும் இதன்போது விளக்கமளிக்கப்பட்டிருந்தது. தேவை நாடும் மகளீர் அமைப்பினால் இலங்கையில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான அனைத்துவிதமான வன்முறைகளையும் இல்லாதொழிக்கும் நோக்கில் கடந்த 3 தசாப்தங்களாக செயற்பட்டு வருகின்றதுடன், உளவியல், மனநல ஆலோசனை, சட்ட உதவி, அவசரகால தங்குமிட வசதிகள் மற்றும் 24 மணிநேர துரித தொலைத்தொடர்பு சேவைகளையும் வழங்கிப் பணியாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# காத்தான்குடியில் தேசிய வாசிப்பு மாதம் அங்குரார்ப்பன நிகழ்வு

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

"அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு" எனும் தொனிப்பொருளில்தேசியவாசிப்புமாதத்தைமுன்னிட்டு அதனை மக்கள் மயப்படுத்துவற்கான அங்குரார்ப்பன நிகழ்வு நேற்றுமுந்தினம் (16) திகதி இடம்பெற்றுள்ளது. காத்தான்குடி கடற்கரையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி ஹிஸ்புழ்ழாஹ் பங்கேற்று நிகழ்வினை அங்குரார்ப்பனம் செய்து வைத்துள்ளார். காத்தான்குடி நகரசபையின் ஏற்பட்டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் புத்தக கண்காட்சியுடன் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளது.

